## TAMILNADU POLLUTION CONTROL BOARD

**MINUTES OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED ROUGH STONE AND GRAVEL QUARRY COVERING EXTENT OF 3.50.4HA FOR THIRU.A. KRISHNASAMY ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F.NO.167/2B, 2C, 2D PART & 170/6 PART PACHAPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AND COVERING EXTENT OF 1.60.0 HA FOR THIRU. R. DURAIRAJ ROUGH STONE AND GRAVEL QUARRY S.F.NO.162, 163/2 PART, PACHAPALAYAM VILLAGE, SULUR TALUK, COIMBATORE DISTRICT AT M/S. SUYA UTHAVI KULU KOOTAMAIPPU BUILDING, PACHAPALAYAM PANCHAYAT, PERIYAKUILI, SULTHANPET PANCHAYAT UNITON, COIMBATORE DISTRICT ON 28.01.2025 AT 10.00 A.M**

**PRESENT:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thirumathi. B. Jeeva | : | **Special District Revenue Officer (Land Acquisition) Highways Coimbatore District** |
| 2 | Tmt. Y. Beulah | : | **District Environmental Engineer (a/c)**<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 3. | Thiru.S. Senthil Kumar | : | **Assistant Environmental Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 4. | Thiru. J. Sathesh | : | **Assistant Environmental Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board, |

| | | | |
|---|---|---|---|
| | | | Coimbatore South. |
| 5. | Tmt. S. Priyanka | : | **Assistant Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 6. | Selvi. S. Meenalosini | : | **Assistant Engineer**,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore South. |
| 5. | Thiru.M.Shaik Nawas | : | EIA Consultant<br>M/s. GEO Exploration and Mining Solutions, Salem. |
| 6. | Public | : | 74 |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has welcomed the **Special District Revenue Officer** Coimbatore, Project proponents and all general public who are attending the public hearing for the Proposed Rough Stone and Gravel Quarry covering an Extent of 3.50.4 Ha for Thiru.A. Krishnasamy Rough Stone and Gravel Quarry, S.F.No.2167/2B, 2C, 2D Part and 170/6 Part , Pachapalayam Village, Sulur Taluk, Coimbatore District and covering an Extent of 1.60.0 Ha for Thiru. R. Durairaj Rough Stone and Gravel Quarry S.F.Nos.162, 163/2 Part, Pachapalayam Village, Sulur Taluk, Coimbatore District.

It is required to obtain Environmental Clearance (EC) mandatorily for 14 type of industries from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India as per EIA Notification No. 1533(E) dated:14/09/2006. Quarry activity is also included in the above. As per the Notification No. 2269(E) dated:01/07/2016, Environmental Clearance is necessary for clusters like A. Krishnasamy and R. Durairaj Rough stone and gravel quarry. While obtaining above clearance conducting public hearing is necessary. She added that the press release informing the conducting of Public Hearing was published in **"Dinathanthi"** and

**Thiruvalargal,**

1. **Thiru.RAMASAMY, PERIYAKUILI:**

Greetings to the District Revenue Officer, District Environmental Engineer, the general public of Periyakuili and the owner of the quarry crusher who have come to the public consultation meeting. I am from Periyakuili and I am engaged in agriculture and transport. Prime business in my village are agriculture and quarrying. So I request you to give permission to Krishnasamy and Durairaj stone quarry. Otherwise, if you look, the educated youth here have also come to the job in quarry. They are doing business by buying lorries and tipper. Nowadays, the quarry industry is more important than agriculture. So I request you to please give permission to them for quarrying. Thank you. Greetings.

2. **Thiru.PRASHANTH, PERIYAKUILI:**

My name is Prashanth, I am from Periyakuili. I am doing business with a lorry. Since the construction material are very scarce, please give the appropriate permission to this quarry.

3. **Thiru.RAJESH SHIVAM, PERIYAKUILI :**

I am from the same town. Periyakuili. My name is Rajesh Shivam. I have completed my diploma in Civil Engineering. Young generation is doing transport business with lorries. The demand for material, like M-sand and gravel have been increased. If you give a license to this quarry, the demand will be decreased.

4. **Thiru.SENDURAVEL, PERIYAKUILI:**

I am Senduravel, Periyakuili. All public in this village depend on this quarry business. Hence there is no objection to issue license. So I request you to give the license soon.

**"Deccan Chronicle"** dated **24.12.2024** and also pointed out the EIA report and Executive summary are made available for public reference at selected Government Offices. Flex boards have been placed at required places and handouts also been distributed to the public. She also informed that the project consultant on behalf of project proponent would make a presentation on the proposed project, after which the Public can express their views. The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South also stated that the views and suggestions of the public about Quarry and reply by the project consultant will be recorded through videography / Audio and the same will be submitted to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Special District Revenue Officer, Coimbatore District, has started the Public Hearing process and invited the project consultant to explain about their proposed project through power point presentation and asked the public to express their views. The main purpose of this meeting was to register the public views related to Environment.

The Project Consultant has explained various features of the project through power point presentation. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Coimbatore South has invited the public to express their views and comments about the proposed Project. The views and suggestions of the public's are detailed below:

5. **Thiru.VIJAYAKUMAR, PERIYAKUILI :**

Hello, my name is A. Vijayakumar, Periyakuili. This quarrying industry is in existence in our village since 1977. Quarry is useful to the educated young generation to do their business. Therefore, I humbly request you to issue a license immediately.

6. **Thiru.G.THANGAVEL, PERIYAKUILI:**

My name is Thangavel, Periyakuili. I have no objection to issue license to Mr. Krishnasamy and Mr. Durairaj quarries. My agricultural land is nearer to this quarry. Many workers will be benefitted from this quarry. Permission may be granted.

7. **Thiru.K.VELUSAMY, PERIYAKUILI:**

My name is Velusamy, I am from this village. Permission may be granted to both Krishnasamy and Durairaj quarry quickly to improve our livelihood.

8. **Thiru.P. SELVAKUMAR, PERIYAKUILI:**

My name is Selvakumar. I am from Periyakuili. My livelihood depends on this quarry only. Many public is also benefitted. It is the main business for everyone. Quarry also generates employment to many. So license may be granted quickly.

9. **Thiru.PRAKASH, PERIYAKUILI:**

My name is Prakash, Periyakuili. Permission may be granted quickly to A. Krishnasamy and R. Durairaj quarry.

10. **Thiru.SHAKTHIVEL, THEGANI:**

Hello everyone, my name is Sakthivel. I am from Thegani Village. I am working in this quarry. Without license my livelihood is affected. Hence I request to issue license soon. Thank you very much.

**11. Thiru.SUBRAMANI:**

My name is Subramaniam. My agricultural farm is located nearby. I have no objection to issue license to this quarry. Thank you.

**12. Thiru.N. PRABHU, PERIYAKUILI :**

Hello everyone. My name is N. Prabhu, Periyakuili. My land is nearer to A. Krishnasamy and R. Durairaj quarry Survey Numbers are 170, 171 & 172. I have no objection to issue the license. 50% of the people in Periyakuili, Village depends on this quarry. If the license for this stone quarry is issued quickly, scarcity of building material will be reduced. So our business and livelihood will be improved.

**13. Thiru.B. THILAGARAJ :**

Hello everyone. My name is Thilagaraj, Periyakuili. I am currently living nearer to Krishnasamy quarry. I have no objection to give license to this quarry. Many people in this village depends on this quarry. Their livelihood will be improved, if license will be issued quickly.

**14. Thiru.SHANTHAKUMAR ,THEGANI:**

Hello everyone. My name is Shanthakumar, Deghani. Greetings to all the officials of the Coimbatore District Administration and the Tamil Nadu Pollution Control Board and the public. On behalf of the Pachapalayam Panchayat, we have made a request in the last meeting. As per that request, quarry owners extended their help in construction of two buildings in Government schools at Thegani and Periyakuili. They also constructed water tank. We also express our gratitude to them on behalf of our village. Hence I request to issue license to those quarry.

List of public attended the public hearing meeting along with photographs and CD/Pen drive recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

Finally, the District Environmental Engineer (a/c), Tmt.Y.Beulah, Tamilnadu Pollution Control Coimbatore South registered vote of thanks to all.

Number of Petitions : 1

28/1/25

**District Environmental Engineer (a/c)**
**Tamilnadu Pollution Control Board**
**Coimbatore South**

28/1/25

**Special District Revenue officer**
**(Land Acquisition) Highways**
**Coimbatore District**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமம், க.ச.எண். 167/2B, 2C, 2D பகுதி, மற்றும் 170/6(P) 3.50.4 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. A. கிருஷ்ணசாமி மற்றும் க.ச.எண்.162, 163/2(P) 1.60.0 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.R.துரைராஜ் ஆகியோர்களின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது மொத்த பரப்பளவு 13.51.4 ஹெக்டர்ஸ் ஆகும். இத்திட்டமானது சூலூர் வட்டம், சுல்தான்பேட்டை ஒன்றியம், பச்சாபாளையம் ஊராட்சி, பெரியகுயிலியில் அமைந்துள்ள சுய உதவிக் குழு கூட்டமைப்பு கட்டிடத்தில் 28.01.2025 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கை குறிப்புகள்.**

## திட்டத்தின் பெயர்

திரு. A. கிருஷ்ணசாமி சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி 3.50.4 ஹெக்டர் பரப்பளவில் க.ச.எண்.167/2 B, 2C, 2D (P), 170/6 (P) மற்றும் திரு. R. துரைராஜ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி 1.60.0 ஹெக்டர் பரப்பளவில் க.ச.எண்.162, 163/2(P) இதன் (மொத்த பரப்பளவு 13.51.4 ஹெக்டர்ஸ்), சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமம், பெரியகுயிலி.

**பங்கேற்றோர்**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. R. ஜீவா | : | தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் எடுப்பு) நெடுஞ்சாலைகள் கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | திருமதி. யோ. பியூலா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ) , தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | திரு.S .செந்தில்குமார் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 4. | திரு. J. சதீஷ் | | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 5. | திருமதி. S. பிரியங்கா | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 6. | செல்வி. S. மீனலோஷினி | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு |
| 7. | திரு. M. ஷேக் நவாஸ் | : | திட்ட ஆலோசகர், ஜியோ எக்ஸ்புரேசன் அண்டு மைனிங் சொல்யுசண்ஸ், சேலம், தமிழ்நாடு. |
| 8. | பொதுமக்கள் எண்ணிக்கை | : | 74 |

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், பச்சாபாளையம் கிராமம், பெரியகுயிலி க.ச.எண். 167/2B, 2C, 2D (P), 170/6 (P) 3.50.4 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கபட்டுள்ள திரு. A. கிருஷ்ணசாமி மற்றும் க.ச.எண்.162, 163/2(பி) 1.60.0 ஹெக்டர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. R. துரைராஜ் ஆகியோரிகளின் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டமானது செயல்படுத்தப்பட உள்ளது. இக்குவாரி திட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொதுமக்களையும் மற்றும் குவாரி உரிமையாளர்களையும், கோயம்புத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் தெற்கு அலுவலக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ) வரவேற்றார். மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 14/09/2006-ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை எண் 1533E-ன் படி 14 வகையான தொழில்களுக்கு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறவேண்டும். (அதில் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கங்களும் சேர்க்கப்பட்டுள்ளன). மேலும் மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 1/7/2016 2269E-ன் படி குழும பகுதியில் வரும் A. கிருஷ்ணசாமி மற்றும் R. துரைராஜ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிகளுக்கு அனுமதி அவசியமாகிறது. அவ்வாறு சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறும்போது பொதுமக்களின் கருத்து கேட்பு அவசியம். அதன்படி இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "டெக்கான்கிரானிக்கல்" ஆகிய இரண்டு நாளிதழ்களில் 24.12.2024 அன்று

அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததையும் மற்றும் தேவையான அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் வைக்கப்பட்டிருந்ததாக தெரிவித்தார். மேலும், இந்தகூட்டம் நடைபெறவுள்ள தகவலை கிராமத்திலுள்ள முக்கியமான இரண்டு இடங்களில் விளம்பரபலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொதுமக்களிடம் வழங்கபட்டுள்ளது. இதனுடைய புகைப்படங்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி உரிமையாளர்களின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் எனவும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள் பதிவு செய்யுமாறும், இவையனைத்தும் ஒலிமற்றும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள்தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பொது மக்கள் எடுத்துரைக்கும் சுற்றுச்சூழல் சம்மந்தமான கருத்துக்களை பதிவு செய்வது இக்கூட்டத்தின் நோக்கம் என்று கூறினார். பின்னர் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தின் திட்ட ஆலோசகரால் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான விளக்கவுரை யை நிகழ்த்தக் கூறினார்.

அதனை தொடர்ந்து சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. M. ஷேக் நவாஸ், ஜியோ

டெக்னிக்கல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்ட செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோயம்புத்தூர் தெற்கு அவர்கள் தற்போது காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைக்கப்பட்ட இந்த சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம் எனவும் அவை வீடியோவிலும் பதிவு செய்யப்படும் எனவும் கூறினார். அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை பதிவு செய்தனர் .ஆலோசனைகளை தெரிவித்தனர்.

<u>**பொது மக்கள் கருத்துக்கள்**</u>

1. <u>**திரு. ராமசாமி, பெரியகுயிலி**</u>

பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலர் அவர்களுக்கும், பெரியகுயிலி பொதுமக்கள் அனைவருக்கும் கல் குவாரி, கிரஷர் உரிமையாளர் அனைவருக்கும் வணக்கம், என் பெயர் ராமசாமி. நான் பெரியகுயிலி பகுதியைச் சார்ந்தவன். விவசாயம் மற்றும் டிரான்ஸ்போர்ட் வைத்திருக்கிறேன். எங்கள் ஊரில்

விவசாயம் மற்றும் கல் குவாரி தொழில் முக்கியமானதாகும். A. கிருஷ்ணசாமி மற்றும் R. துரைராஜ் கல் குவாரிகளுக்கு அனுமதி அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். படித்த இளைய தலைமுறையினர் கல் குவாரி தொழிலுக்கு வந்துவிட்டார்கள். லாரி வாங்கி தொழில் நடத்துகிறார்கள். விவசாயத்தை விட கல் குவாரித் தொழில் அதிகமாக உள்ளது. அதனால் கல் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. <u>திரு. பிரசாந்த், பெரியகுயிலி</u>

என் பெயர் பிரசாந்த். நான் பெரியகுயிலி பகுதியைச் சார்ந்தவன். நான் லாரி வைத்து தொழில் செய்து வருகிறேன். கட்டுமானப் பொருள்கள் கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது. எனவே, கல் குவாரிக்கு உரிய அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. <u>திரு. ராஜேஷ்சிவம், பெரியகுயிலி</u>

என் பெயர் ராஜேஷ்சிவம். நான் பெரியகுயிலி பகுதியில் வசித்து வருகிறேன். நான் Diploma in Civil Engineering முடித்திருக்கிறேன். இங்கு வசிக்கும் இளைய தலைமுறையினர் அனைவரும் லாரி வைத்து டிரான்ஸ்போர்ட் தொழில் செய்து வருகிறோம். எம்–சாண்ட், ஜல்லி போன்ற பொருள்களுக்கு மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. எனவே, இக்குவாரிக்கு அனுமதி வழங்கினால் கட்டுமானப் பொருள்களுக்கு உண்டான தட்டுப்பாடு குறையும்.

4. <u>திரு.செந்தூரவேல், பெரியகுயிலி</u>

என் பெயர் செந்தூரவேல். நான் பெரியகுயிலி பகுதியைச் சார்ந்தவன். இந்த ஊரில் அனைவரும் கல் குவாரி தொழிலை நம்பி தான் இருக்கிறார்கள். எனவே, கல் குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை . விரைவில் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

5. <u>திரு. A. விஜயகுமார், பெரியகுயிலி</u>

என் பெயர் விஜயகுமார். நான் பெரியகுயிலி பகுதியில் வசித்து வருகிறேன். இந்த கல் குவாரி 1977 ஆம் ஆண்டிலிருந்து எங்கள் ஊரில் இருக்கிறது. அதனால் எங்கள் ஊரில் வசிக்கும் படித்த இளைய தலைமுறையினர் பலருக்கு இக்கல்குவாரி மூலம் தொழில் செய்ய உதவியாக இருக்கிறது. எனவே, இக்கல் குவாரிக்கு உடனடியாக அனுமதி தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

6. <u>திரு. G. தங்கவேல், பெரியகுயிலி</u>

என் பெயர் தங்கவேல். நான் பெரியகுயிலி பகுதியைச் சார்ந்தவன். கிருஷ்ணசாமி மற்றும் துரைராஜ் ஆகியோர்களின் கல் குவாரிக்கு அனுமதி வழங்குவதில் எந்தவித ஆட்சேபணையும் இல்லை. இக்கல் குவாரிக்கு அருகில் எங்கள் தோட்டம் உள்ளது. இதனால் பல தொழிலாளர்கள் பயனடைவார்கள். தாராளமாக அனுமதி கொடுக்கலாம்.

**7. திரு.K. வேலுச்சாமி, பெரியகுயிலி**

என் பெயர் வேலுச்சாமி. இதே ஊரில் வசிக்கிறேன். கிருஷ்ணசாமி மற்றும் துரைராஜ் ஆகிய இரண்டு கல் குவாரிகளுக்கு விரைந்து அனுமதி கொடுத்து வாழ்வாதாரம் மேம்பட வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**8. திரு.P. செல்வகுமார், பெரியகுயிலி**

என் பெயர் செல்வகுமார். நான் பெரியகுயிலி பகுதியில் வசித்து வருகிறேன் எங்கள் வாழ்வாதாரமே இக்கல்குவாரியை நம்பி தான் இருக்கிறது. பல நபர்கள் பயனடைகிறார்கள். முக்கியத் தொழிலாக அமைந்திருக்கிறது. வேலை வாய்ப்பும் இக்கல் குவாரியை நம்பி தான் இருக்கிறது. தாராளமாக அனுமதி வழங்கலாம்.

**9. திரு. பிரகாஷ், பெரியகுயிலி**

என் பெயர் பிரகாஷ். பெரியகுயிலி கிராமம். திரு. கிருஷ்ணசாமி மற்றும் திரு. துரைராஜ் கல் குவாரிக்கு விரைந்து அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**10. திரு. சக்திவேல், தேகாணி**

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சக்திவேல். நான் தேகாணியில் வசித்து வருகிறேன். நான் கல் குவாரியில் வேலை செய்து வருகிறேன். எங்கள் வாழ்வாதாரம் பாதிப்படைந்து வருகிறது. விரைந்து கல் குவாரிக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**11. திரு. சுப்ரமணி, தேகாணி**

என் பெயர் சுப்ரமணி . குவாரி அருகில் தோட்டம் உள்ளது. குவாரிக்கு அனுமதி அளிப்பதில் எந்த ஆட்சேபணையும் இல்லை. நன்றி.

12. <u>திரு. N. பிரபு, பெரியகுயிலி</u>

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் பிரபு. நான் பெரியகுயிலி பகுதியில் வசிக்கிறேன். திரு. கிருஷ்ணசாமி மற்றும் திரு. துரைராஜ் கல் குவாரிக்கு அருகில் எங்கள் தோட்டம் உள்ளது. அதன் சர்வே எண். 170, 171, 172 ஆகும். அனுமதி வழங்குவதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. பெரியகுயிலி ஊராட்சியில் சுமார் 50 % மக்கள் இக்கல் குவாரியை நம்பி தான் இருக்கிறார்கள். விரைந்து அனுமதி கொடுத்தால் கட்டுமானப் பொருள்களுக்குரிய தட்டுப்பாடு குறையும். தொழிலும், வாழ்வாதாரமும் மேம்படும்.

13. <u>திரு. B. திலகராஜ், பெரியகுயிலி</u>

என் பெயர் திலகராஜ். நான் பெரியகுயிலில் வசித்து வருகிறேன். நான் திரு.கிருஷ்ணசாமி குவாரிக்கு அருகில் தான் வசித்த வருகிறேன். இக்குவாரிக்கு அனுமதி கொடுப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. எங்கள் ஊரில் வசிக்கும் பல நபர்கள் இத்தொழிலைச் சார்ந்து இருப்பதால் கூடிய விரைவில் அனுமதி கொடுத்தால் எங்கள் வாழ்வாதாரம் மேம்பட்டு பயனடைவோம்.

14. <u>திரு. சாந்தகுமார், தேகாணி</u>

அனைவருக்கும் வணக்கம். கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள், பொதுமக்கள் அனைவருக்கும் வணக்கம். என் பெயர் சாந்தகுமார். நாங்கள் பச்சாபாளையம் ஊராட்சி சார்பாக கடைசியாக நடந்த கூட்டத்தில் ஒரு கோரிக்கைய முன் வைத்தோம். அக்கோரிக்கையின் படி தேகாணி, பெரியகுயிலி பகுதியில் இருக்கும் இரண்டு

பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு உதவி செய்து கொடுத்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன். குடிநீர் தொட்டி அமைத்து கொடுத்துள்ளார்கள். எனவே, இக்கல்குவாரிக்கு அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மனுக்களின் எண்ணிக்கை : 1

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொளி குறுந்தகடு, காணொளி, ஒலி மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆணையத்திற்கு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தலைமையேற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவலருக்கும், பொது மக்களுக்கும், காவல் துறையினருக்கும் மற்றும் அனைவருக்கும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ) அவர்கள் நன்றிகளை தெரிவித்தார். கூட்டம் நிறைவு பெற்றது.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (கூ/பொ)**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**
**கோயம்புத்தூர் தெற்கு**

**தனி மாவட்ட வருவாய் அலுவலர்**
**(நிலம் எடுப்பு) நெடுஞ்சாலைகள்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**